


சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித் துறை கூட்டரங்கில், நேற்று முன்தினம் (25.10.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, கோயம்புத்தூர் மண்டலப் பொதுப்பணித் துறையின் மூலம் நடைபெற்று வரும் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, தலைமைக் கட்டடக் கலைஞர் திருமதி. இளவேண்மால், கோயம்புத்தூர் மண்டலத் தலைமைப் பொறியாளர் ரங்கநாதன், சிறப்புப்பணி அலுவலர் இரா.விஸ்வநாத், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பணியின்போது உயிரிழந்த

# அரசுப் பேருந்து நடத்துநரின் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 27 -

பணியின்போது உயிரிழந்த அரசுப் பேருந்துநடத்துநரின்குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் ரூ. 10 லட்சம் நிதியுதவி குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்த அவரது அறிவிப்பு வருமாறு:

சென்னை வியாசர்பாடி பணிமனை பேருந்து எண். VYJ 1399, மகாகவி பாரதியார் நகரிலிருந்து கோயம்பேடு பேருந்து நிலையம் நோக்கி சென்று கொண்டிருந்த மாநகரப் பேருந்தில் நடத்துநராகப் பணியாற்றிவந்த திரு. ஜெ.ஜெகன் குமார் (பணி எண். C52200) பயணி ஒருவருடன் ஏற்பட்ட வாய்தகராறின் போது அப்பயணி தாக்கியதில் பலத்த காயம் ஏற்பட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் 24.10. 2024 இரவு உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியறிந்து மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

உயிரிழந்த அரசு மாநகரப் பேருந்து நடத்துநர் ஜெ.ஜெகன் குமார் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் பணியாளர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த நடத்துநர் ஜி.ஜெகன்குமார் அவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் பத்து இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### கோயம்புத்தூர் மண்டலம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆலோசனை!

# கட்டுமானப் பணிகளை குறித்த காலத்திற்குள் முடித்திட வேண்டும்!

## ொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

சென்னை, அக்.27-

பொதுப்பணித்துறையின் கோயம்புத்தூர் மண்டலம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து, நேற்று முன்தினம் (25.10.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள், சென்னை சேப்பாக்கம் பொதுப்பணித்துறை கூட்டரங்கில் ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆய்வுக் கூட்டத்தி ற்கு வருகை தந்த அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களை வரவேற்று ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்தார்.

கடந்த மூன்று ஆண்டுகளில், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், பொதுப்பணித்துறை யின் மூலம் கட்டட கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இதர துறைகளின் அறிவிப்பு பணிகள் மற்றும் இதர பணிகளின் தற்போதைய நிலை குறித்து அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள் தரத்துடன், குறித்த காலக் கெடுவிற்குள் முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், நிலுவையி லுள்ள பணிகள் விரைவில் துவங்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப் பொறியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

முக்கிய அறிவிப்பு பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்க, தலைமைக் கட்டடக் கலைஞர், கட்டட வரைபடங்கள் உடனடியாக தயாரித்து அளித்திட வேண்டும் என்றும், திட்டம் மற்றும் வடிவமைப்பு கண்காணிப்பு பொறியாளர் அனைத்து பணி களுக்கும் உரிய கட்டட வடிவமைப்பு (Design) விவரங்கள் குறித்த காலத்தில் பணித் தளத்திற்கு வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

**கட்டடங்களின் பராமரிப்புப் பணி!**

கண்காணிப்புப் பொறியாளர்கள் மக்கள் பயன்பாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகள், நீதிமன்றங்கள் மற்றும் இதர முக்கிய கட்டடங்களை அவ்வப்போது ஆய்வு செய்து, பராமரிப்பு பணிகள் குறித்து, பதிவு செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

அரசு மருத்துவமனை மற்றும் பொது கட்டடங்களில் பெரும்பாலான மின் தூக்கிகள் (Lift) முறையான பராமரிப்பில் இல்லை என புகார்கள் எழுவதால், முறையான பராமரிப்புடன் மின் தூக்கிகள் இயங்குவதை உறுதி செய்திட வேண்டும். வருடாந்திர பராமரிப்புக் கட்டணம்(AMC) செலுத்தப் பட்டுள்ளதா என்பதை தலைமைப் பொறியாளர்கள் கண்காணிக்க வேண்டும் என்றும், மின்சாதனங்களை பராமரிப்பதில் கண்காணிப்புப் பொறியாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும், மிகவும் உயரமான கட்டடங்களுக்கு இடிதாங்கி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

தற்போது, மாவட்ட தலைநகரங்களில் உள்ள அரசு சுற்றுலா மாளிகைகளில் மின்தூக்கி வசதி இல்லாத கட்டடங்களுக்கு உடனடியாக புதியதாக மின்தூக்கி வசதி அமைக்க நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும், தரக் கட்டுப்பாட்டு பொறியாளர்கள் அனைத்து கட்டடப் பணிகளை ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும், கட்டடப் பணியின் போது, பணி தளத்தில் ஆய்வகம் அவசியம் அமைக்கப்பட வேண்டும் எனவும், கட்டுமான பொருட்களின் தரச்சோதனை சான்றிதழ்கள், பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், அனைத்து பணிகள் முடித்து ஒப்படைக்க தரக்கட்டுப்பாட்டு கோட்ட அனுமதி பெற வேண்டும் என்று உத்தரவிட்டார்.

**குறித்த காலக்கெடுவுக்குள் பணிகளை முடித்திட வேண்டும்!**

முத்திரைத் திட்டப் பணிகளில் சிறப்பு கவனம் செலுத்துதல் மற்றும் அறிவிக்கப்பட்ட பெரிய திட்டப் பணிகளுக்கு, நிர்வாக ஒப்புதல் பெற கருத்துரு சமர்ப்பிக்கும்போது, திட்ட உருவாக்க நிதியை பயன்படுத்தி மண் பரிசோதனை மற்றும் இதர பணிதள ஆய்வுகள் மேற்கொண்டு மதிப்பீடு தயாரிக்க வேண்டும் என அறிவுரைகள் வழங்கினார்.

முத்திரைத் திட்டப் பணிகள் மற்றும் இதர பெருந்திட்டப் பணிகளில் ஒப்பந்தம் மேற்கொள்ளும்போது, பணிகளை குறித்த காலகெடுவிற்குள் முடித்திடும் வகையில், விரிவான காலதிட்ட அட்டவணை (Time Schedule + Milestone) ஒப்பந்ததாரரிடம் பெற்று இணைக்க வேண்டும் என்றும், மதிப்பீடு தயாரிக்கும்போது, மண் பரிசோதனை அடிப்படையில் உரிய அடித்தளம் வடிவமைத்தல், கட்டடத்தில் மேற்கொள்ள வேண்டிய வசதிகள் குறித்த அனைத்து விவரங்கள் பயன்பாட்டுத் துறையிடமிருந்து பெறுதல் ஆகியவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், இந்நடைமுறையை முறையாக பின்பற்றி, கூடுதல் நிதிக்காக திருத்திய நிர்வாக அனுமதி(RAS) பெறுவதை தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தினர்.

கட்டடப் பணிகள் துவங்கப்படுவதற்கு முன், சுற்றுச் சூழல் அனுமதி, DTCP உள்ளிட்ட தேவையான அனைத்து அரசு அனுமதிகளும் பெற வேண்டும் என்று தெரிவித்த அமைச்சர் அவர்கள், கட்டடங்களில் நீர்கசிவு ஏற்படாத வண்ணம் தேவையான நீர்புகா பூச்சு (Waterproof Treatment) நடைமுறைகளை அவசியம் பயன்படுத்தவும்,

எம்சான்ட் சுவர் பூச்சு பயன்பாட்டிற்கு தேவையான கெமிக்கல் கலவை (போஸ்ராக் நிறுவனத்தின் செபக்ஸ் 113 கலவை போன்றவை) பயன்படுத்தவும், கட்டடப் பராமரிப்பு பணிகளின்போது, தற்போது நடைமுறையில் உள்ள நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினார்.

மின் பொறியாளர்கள் அவ்வப்போது மின் அமைப்புகளை ஆய்வு செய்து, மின்கசிவு ஏதும் ஏற்படா வண்ணம் பாதுகாத்திடவும், பொது கட்டடங்களில் மின் சிக்கன நடவடிக்கையாக சூரிய மின்சக்தி தகடுகள் பொருத்த துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பின்னர், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் கோயம்புத்தூர் மண்டலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து கட்டட பணிகளின் முன்னேற்றம் குறித்து, ஒவ்வொரு பணியாக ஆய்வு செய்தார்.

ரூ.245 கோடி மதிப்பில் கோயம்புத்தூர் மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மையக் கட்டடம்,

ரூ.114.16 கோடி மதிப்பில், கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சியில் தகவல் தொழில்நுட்ப பூங்கா கட்டடம், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் ரூ.11.23 கோடி மதிப்பில், நீதிமன்றக் கட்டடம் மற்றும் ரூ.14.59 கோடி மதிப்பில், பொள்ளாச்சி நீதிமன்றக் கட்டடம், ரூ.59.43 கோடி மதிப்பில், சேலம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக கட்டடம், ரூ.101.19 கோடி மதிப்பில், நாமக்கல் சட்டக் கல்லூரி கட்டடம் மற்றும் ரூ.101.55 கோடி மதிப்பில், சேலம் அரசு சட்டக் கல்லூரி கட்டடம், திருப்பூர் மாவட்டம், வேலம்பாளையம் அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ.27.00 கோடி மதிப்பில், கூடுதல் கட்டடம், ரூ.34 கோடி மதிப்பில், ஈரோடு மாவட்டம், பெருந்துறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை மையக் கட்டடம், ரூ.11.50 கோடி மதிப்பில், கோயம்புத்தூர் வணிகவரித்துறை கூடுதல் கட்டடம் மற்றும் ரூ.180.94 கோடி மதிப்பில், சேலம் மாவட்டம், தலைவாசலில் விலங்கு அறிவியல் மற்றும் கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் கட்டடங்கள், கேரள மாநிலம் வைக்கம் தந்தை பெரியார் நினைவக கட்டடச் சீரமைப்புப் பணிகள் மற்றும் இதர மணிமண்டபங்கள் மற்றும் நினைவக கட்டடங்கள், உதகமண்டலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கூடுதல் வசதிகள் மற்றும் பாரம்பரியக் கட்டடங்களை புனரமைத்தல் பணிகள் ஆகியவற்றின் தற்போது நிலை குறித்து ஆய்வு செய்து, காலதாமதமின்றி விரைவாக முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

மேலும், பருவமழையை எதிர்கொள்ள ஏதுவாக பொதுப்பணித் துறை பொறியாளர்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவும், வெள்ள பாதிப்பு பகுதிகளில் வெள்ளத்தடுப்பு சாதனங்கள் உரிய அளவில் சேமித்து வைக்கவும், பள்ளி வளாகம், குடியிருப்பு பகுதிகளில் உள்ள பயன்பாட்டில் இல்லாத முற்றிலும் பழுதடைந்த கட்டடங்களை உடனடியாக இடித்து அகற்றிடவும், தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை, வடிகால்களில் சென்றடையும் வண்ணம் பம்ப் செட் மூலம் இறைத்து அவ்வப்போது அகற்ற வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, தலைமைக் கட்டடக் கலைஞர் திருமதி.இளவேண்மால், கோயம்புத்தூர் மண்டலத் தலைமைப் பொறியாளர் ஆர். ரங்கநாதன், சிறப்பு பணி அலுவலர் இரா.விஸ்வநாத், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




திருச்சி மத்திய மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பாக, கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவ மாணவியர்களுக்கான, தலைவர் கலைஞரின் கவிதை, திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி, திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் 24.10.2024 அன்று,காலை 9 மணிக்கு, திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணியும், மேயர் அன்பழகனும் விழாவினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்கள். மாநில கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன் சிறப்புரையாற்றினார். திருச்சி மத்திய மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாவட்ட அமைப்பாளர் சி.துரை கந்த சாமி வரவேற்புரை ஆற்றினார். கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநகர அமைப்பாளர் திருமதி. மெஹருன்னிஸா நன்றியுரை கூறினார்.



கோவை மாநகர் மாவட்டக் கழக தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

### கோவை மாநகர் மாவட்ட

# தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் - அமைச்சர் வி. செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினார்!

கோவை, அக்.27-

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம், மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் முன்னாள் எம்எல்ஏ., முன்னிலையில், அவினாசி சாலையில் உள்ள ஜென்னிஸ் ரெசிடன்சி டைமண்ட் அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர் மாநில அயலக அணி துணைச் செயலாளர் முத்துவேல் ராமசாமி, தெற்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர் மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் சத்யா பழனிகுமார், வடக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் மு.வாசிம்ராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

மேலும் இந்நிகழ்வில்,தலைமைக் கழக நிர்வாகிகள் கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா. பழனிச்சாமி,தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, சட்டத்துறை இணைச் செயலாளர்கள் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, பி.ஆர்.அருள்மொழி, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் நா.முருகவேல், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், மாநில அமைப்பு சாரா தொழிலாளர் அணி துணைச் செயலாளர் விஷ்ணு பிரபு, ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் திம்பம் பட்டி ஆறுச்சாமி,மாநில கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் மீனா ஜெயகுமார்,மாநகர் மாவட்ட திமுக நிர்வாகிகள் துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்எம்பி. முருகன்,மாநகராட்சி மேயர் இரா.ரங்கநாயகி ராமச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.பி. கண்ணப்பன்,வே.பாலசுப்பிரமணியன், ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.நா.உதயகுமார்,மு.மா.ச.முருகன்,ம.மகுடபதி,இரா.மணிகண்டன், ஆடிட்டர் சசிகுமார், நோயல் செல்வம்,ச.குப்புசாமி,ச.கார்த்திகேயன், சங்கனூர் ஆனந்தகுமார்,தங்கம் சந்திரசேகர், சரஸ்வதி புஷ்பராஜ்,

ஏ.பி.நாகராஜ் பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.எம்.சாமி,மு.சிவா, ஷேக் அப்துல்லா, துரை செந்தமிழ்ச் செல்வன்,மா.நாகராஜ்,இரா.சேரலாதன்,ப.பசுபதி,ஆர். எம். சேதுராமன்,மார்க்கெட் எம். மனோகரன்,வி.ஐ.பதுருதீன்,வ.ம.சண்முகசுந்தரம், பரணி கே பாக்கியராஜ்,கே.எம்.ரவி,எ.எம்.கிருஷ்ணராஜூ,கோவை லோகு, அஞ்சுகம் பழனியப்பன், வட்டக் கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,பங்கேற்றனர்.

# செஞ்சியில் சிறு தானிய விழிப்புணர்வு ஊர்தி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கிவைத்தார்

செஞ்சி, அக்.27-

செஞ்சியில் சிறு தானிய விழிப்புணர்வு ஊர்தியை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

தமிழ்நாடு அரசு வேளாண்மை -உழவர் நலத்துறை,தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில்சிறு தானிய விழிப்புணர்வு விளம்பர ஊர்தி பிரச்சாரம்செஞ்சிவட்டார வேளாண்மை அலுவலகம் எதிரில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் மொக்கியார் அலி மஸ்தான்,முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் சுஜாதா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதிசட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு உழவர் நலத்துறை சார்பில் தொடங்கிய சிறுதானிய விழிப்புணர்வு ஊர்தியை கொடியசைத்துதொடங்கி வைத்தார்.

இந்த ஊர்தி மூலம் செஞ்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிராம பகுதிகளிலும் சிறுதானியங்களில் அதிக மகசூல் பெற சான்று பெற்ற விதைகள் பயன்படுத்துதல் ,விதை நேர்த்தி செய்தல் , வரிசைவிதைப்பு செய்தல் ,உயிர் உரங்கள் இடுதல், நுண்ணூட்ட உரங்கள் இடுதல்,சமச்சீர் உரம் இடுதல் போன்றவற்றை குறித்தும்,சிறுதானியங்களானசோளம், கம்பு, குதிரைவாலி, ராகி ஆகியவற்றை மானாவாரி சாகுபடிக்கு ஏற்று வறட்சியை தாங்கி வளரக்கூடியவை என இவற்றின் பல்வேறு சிறப்புகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.

நிகழ்ச்சியில்செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன்,ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை,மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் மணிமாறன், ஒன்றியவிவசாய அணி அமைப்பாளர் பெருங்காப்பூர் ராஜேந்திரன்,வேளாண்மை அலுவலர் செந்தில்நாதன், துணை வேளாண்மை அலுவலர் ஸ்ரீதர்,உதவி வேளாண்மை அலுவலர்கள் திருநாவுக்கரசு, சுப்ரியா, காந்திமதி, உமா பிரியா, புவனேஸ்வரி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஸ்ரீதேவி,உதவி தொழில் நுட்ப மேலாளர் ஜெய கணேஷ்,ஒன்றிய துணைச் செயலாளர் செல்வமணி,குமரவேல்,தேவராஜன்,தொண்டரணி பாஷா உள்ளிட்டோர் கொண்டனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; இலங்கைக் கடற்படையினர் கைது செய்த தமிழ்நாட்டின் மீனவர்கள் விடுவிக்கப்பட விரைவான நடவடிக்கை வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; ஒவ்வொரு முறையும் தமிழ் மீனவர் கைது செய்யப்படும்போதெல்லாம் நமது முதல்வர் கடிதம் அனுப்பிக் கொண்டிருக்கிறார்.**

**எனினும் மீனவர் கைது, படகுகள் பறிப்பு தொடர்கதையாகி வருகிறது. தற்போது இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ள 128 மீனவர்களையும், 199 படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்பது முதல்வரின் கோரிக்கை. இது கேட்க வேண்டிய செவிகளுக்கு இன்னும் சென்று சேரவில்லையோ ?**

**புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா, பதவி ஏற்றதும் இலங்கைக்குப் புதிய தொடக்கம், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கான புதுயுகம், மறுமலர்ச்சி, நனவாகும் கனவு என்றெல்லாம் அடுக்கினார்.**

**நம்பிக்கை ஒளி பிறக்கும், நமது மீனவர்களுக்கு அச்சமில்லா வாழ்க்கைப் பயணம் தொடங்கும் என்று எதிர்பார்த்தோம்.**

**ஆனால் தொடக்கம், சோகம் கப்பியதாகவே இருக்கிறது.**

**‘இடதுசாரி’ எனப்படும் இலங்கை ஜனாதிபதி, எப்போது ஏழை மீனவர்களைக் கண்விழித்துப் பார்ப்பாரோ?**